[30th August 1961

* 1495. *Q.*—Sri A. R. MARIMUTHU : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

திண்டுக்கல்லில் உள்ள நடமாடும் ஆஸ்பத்திரி ஆரம்பிக்கப் பட்டதிலிருந்து இதுவரை என்ன வேலை செய்திருக்கிறது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : A statement [a] is placed on the table of the House.

Official correspondence

* 1496 *Q.*—Sri N. MARUDACHALAM (On behalf of Sri N. K. PALANISAMI) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any instructions have been issued to all Government Offices in the district to use Tamil in official correspondence; and

(*b*) how far the instructions are being carried out?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Yes.

(*b*) The instructions issued by Government as well as by the Official Language Committee are being carried out by all concerned and the scheme is generally working satisfactorily.

Sri S. M. ANNAMALAI : இப்படி உத்திரவு பிறப்பித்தும் கூட தமிழ் டைப்ரட்டர்கள் வந்து சேரவில்லை, அதனாலே தமிழிலே டைப் செய்வதற்கு போதிய அளவு சௌகரியம் இல்லை என்று சொல்லப்படுகிறதே. சர்க்கார் இதைப் பரிசீலனை செய்து ஆவன செய்வார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்போது போதுமான டைப்ரைட்டர்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது.

* 1497 *Q.*—Sri M. SELVARAJ (on behalf of Sri N. R. THIAGARAJAN) : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாஜிஸ்டிரேட் ஆபீஸ், தாலூகா ஆபீஸ், முனிசிபாலிடி, பஞ்சாயத்துப் போர்டு போன்ற சர்க்கார் காரியாலய உத்தரவு களில் இருக்கும் 'நீர்', 'உமக்கு' என்ற மரியாதை குறைவான வார்த்தைகளை நீக்கி 'நீங்கள்' 'உங்களுக்கு' என்ற கௌரவமான வார்த்தைகளை உபயோகிக்க உத்தரவிட உத்தேசமுண்டா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : மேல் அலுவலர் களுக்குத் "தாங்கள்" என்றும் "தங்கள்" என்றும், ஒத்தநிலை அலுவலர்களுக்கும், கீழுள்ள அலுவலர்களுக்கும் "நீங்கள்"

[a] Printed as Appendix I on page 418 infra.

30th August 1961]

"உங்கள்" என்றும், கடைநிலைப் பணியாளர்களுக்கு "நீர்" "உமது" என்றும் எழுத வேண்டும் என்று ஆட்சி மொழிக்குழு, எல்லாத் துறைகளின் தலைவர்களுக்கும் கலெக்டர்களுக்கும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. பொது மக்களுக்கு எழுதும் பொழுது எவ்வித வேறுபாடுமில்லாமல் "தாங்கள்", "தங்கள்" என்ற சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

SRI M. KALYANASUNDARAM: ஜில்லா மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள், இன்னும் மற்ற மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளிலிருந்து அனுப்பப்படும் சம்மன்களிலே "நீ, நீ" என்று போடுகிறார்களே. அது நீக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த உத்திரவு இன்னும் 'Permeate' ஆகவில்லை. அங்கெல்லாம் இந்த உத்திரவு போய்ச் சேரவேண்டும்.

SRI K. VINAYAGAM: நீங்கள், நீர் என்கிற இரண்டு வார்த்தைகளுக்கும் அதிக வித்தியாசமில்லை என்பது அரசாங்கத் திற்குத் தெரியுமா? ஆங்கிலத்திலே 'யு' என்றுதான் சொல்லு வார்கள். பெரிய உத்தியோகத்தில் இருக்கிறவர்களைக் குறிக்கும் போதும் சிறிய உத்தியோகத்தில் இருக்கிறவர்களை குறிக்கும் போதும் 'யு' என்ற வார்த்தையைத்தான் உபயோகிக்கிறோம். அதிலே ஒரு வித்தியாசம் இல்லை. இப்படி வித்தியாசங்கள் காட்டு வதினால் நாமே ஒரு தவறான அர்த்தத்தை இந்த வார்த்தைக்கு உண்டாக்குகிறோம் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த வித்தியாசம் ஆங்கிலத்திலே இல்லை. தமிழிலேதான் இருக்கிறது. புலவர்கள் "அவன், அவள்" என்று சொன்னால் தப்பில்லையென்று சொல்லுகிறார்கள். ஆனால் நடைமுறையிலே 'அவன்' என்று சொன்னால் அது மரியாதைக் குறைவாக எடுத்துக் கொள்ளப்படு கிறது. ஜனங்களுக்கு பழக்கம் வந்த பிற்பாடு அவர்கள் விரும்புகிற வகையிலே செய்ய வேண்டுமென்பதுதான் அரசாங்கத் தின் நோக்கம்.

SRI M. SELVARAJ: பொதுவாக தாசில்தார்களும் மற்ற ரெவின்யூ அதிகாரிகளும் கிராமப் பஞ்சாயத்து தலைவர்களுக்கு அனுப்புகிற நோட்டீஸ்களில் எல்லாம் 'நீர் என் முன்னால் ஆஜராக வேண்டும்', என்று கட்டளையிடுகிற மாதிரி அனுப்புகிறார் கள். இதை மாற்றுவதற்கு அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: நான் குறிப்பிட்ட உத்திரவு அமுலுக்கு வரும்பொழுது இந்த நிலைமை மாறிவிடும். பழைய சகவாசத்தினால் அது அப்படியே இருக்கிறது. இன்னும் கொஞ்ச நாள் போனால் நிலைமை மாறி விடும்.

[30th August 1961

Sri M. KALYANASUNDARAM : எழுத்து மூலம் அனுப்பப் படும் கடிதங்களில் மட்டும் இந்த மரியாதையான வார்த்தைகளை உபயோகிக்கவேண்டுமென்பது உத்தரவா? நேரில் பொது மக்களோடு பேசப்படும்போதும் இந்த மரியாதையான பதங்கள் உபயோகப்படுத்தப்படுமா?

The Hon. Sri M. A. MANICKAVELU : இப்பொழுது எழுது கிற சமாசாரந்தான், பேசுவதில்லை.

Leprosy Hospital (Perambalur)

DEPUTY SPEAKER : As the hon. Member who gave notice of question No. 1498 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

*** 1498 Q.—Sri K. PERIANNAN :** கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா, பெரம்பலூர் தாலுகா, தலைமை யிடத்தில் எப்போது குஷ்டரோக ஆஸ்பத்திரி ஏற்பட்டது?

(இ) அதற்கு இதுவரை எவ்வளவு தொகை, கட்டிடம், பணி யாளர் சம்பளம் உட்பட செலவானது?

(உ) எத்தனை கிராமங்கள் இதுவரை சுற்றி வந்திருக்கிறது? ஆதாரம் என்ன?

The Hon. Sri M. A. MANICKAVELU : (அ) 14th March 1960.

(இ) No expenditure has been incurred on the construction of buildings as the centre is housed in a rented building. A recurring expenditure of Rs. 63,253·51 and a non-recurring expenditure of Rs. 9,987·81 has been incurred for the centre upto 31st December 1960.

(உ) The area covered by the Centre is 800 square miles with a population of 93,276 out of which 74,411 persons have been surveyed and 10,394 persons have been examined upto 28th August 1961. The Medical Officer is sending a monthly progress report regarding the work done by the Centre.

Tamil College for Kaveripoompattinam

*** 1499 Q.—Sri T. R. RAMAMIRTHA THONDAMAN :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

காவேரிப்பூம்பட்டிணத்தில் தமிழ்க் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென தஞ்சை அபிவிருத்தி குழுவின் சிபாரிசின் பேரில் அரசாங்கம் எடுத்த முடிவு என்ன?

The Hon. Sri C. SUBRAMANIAM : No recommendation for the opening of a Tamil College at Kaveripoompattinam, Tanjore district, has been received by the Government from the Tanjore Development Council.